விலை: சதம் 75 ★★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 23 புரட்டாதி 24 ஜுல்ஹஜ் 11 இதழ் 238
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 10-10-1981

## "சீ-நோரின் அவலநிலைக்கு அரசு தலையீடே காரணம்"

### யாழ். எம். பி. கண்டனம்

(யாழ்ப்பாணம்)

"லாபத்தில் இயங்கி வந்த காரைநகர்-குருநகர் சீ-நோர் நிறுவனங்கள் அரசாங்கத்தின் தலையீடு காரணமாகவே இந்த அவலநிலைக்குள்ளாகின" என்று யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாநாட்டில் கவலை தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திரு. வீரரத்ன வின் உரையைக் கண்டித்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

காரைநகர்-குருநகர் சீ-நோர் ஸ்தாபனங்கள் ஒரு தமிழரால் ஸ்தாபிக்கப்பட்டது. லாபத்துடன் இயங்கிவந்த இந்த நிறுவனம் கொழும்புக்கு மாற்றப்பட்டதால் இன்று மூடும் தருவாயில் இருக்கிறது"

6-ம் பக்கம் பார்க்க

# சீ-நோரை எம்மிடம் தாருங்கள் லாபம் காட்டுகின்றோம்!

**தணிக்கை**

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினுல் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை அமுலில் உள்ளது.

## யாழ் அபி. சபைத்தலைவர் அமைச்சரிடம் கோரிக்கை

### செயலகமாநாட்டில்காரசாரமான விவாதம்

[ஏ. வி. மாணிக்கம்]

காரைநகர் சீ-நோர் நிறுவனத்தின் இன்றைய நிலைகுறித்து ஆராயும் பொருட்டு யாழ். செயலகத்தில் நடைபெற்ற மாநாடு ஒன்றின்போது கடற்றொழில் அமைச்சரின் செயலாளர் திரு. அனுரா வீரரத்னவுக்கும், யாழ் மாவட்ட சபைத் தலைவர் திரு. எஸ். நடராசாவுக்குமிடையே காரசாரமான விவாதம் நடைபெற்றது:

நஷ்டத்தில் இயங்கிவரும் சீ-நோர் நிறுவனத்தின் நிர்வாகத்தை யாழ். மாவட்ட சபையிடம் ஒப்படையுங்கள்; நம் அதனை லாபத்தில் இயக்கிக்காட்டுகிறோம்'' என்று யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் இம்மகாநாட்டில் கலந்து கடற்றொழில் அமைச்சரிடம் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்.

இம்மகாநாட்டில் கடற்றொழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா, திரு. அனுரா வீரரத்ன, அமைச்சின் உதவிச் செயலாளர் திரு அனேய் பெர்னண்டோ, யாழ் மாவட்ட சபைத்தலைவர் திரு. எஸ். நடராசா, எம் பிக்களான திருவாளர்கள். வி. யோகேஸ்வரன், கே துரைரத்தினம், ரி. திருநாவுக்கரசு, யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா மற்றும் சீ-நோர் அதிகாரிகள், யாழ். செயலக அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

திரு. வீரரத்ன சீநோர்பற்றி கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:

இலங்கையிலுள்ள சீநோர் ஸ்தாபனத்துக்காக பெற்றுக்கொண்ட வெளிநாட்டு உதவியில் 60 சதவீதம் காரைநகர் சீ-நோர் நிறுவனத்துக்கு கொடுத்திருக்கிறோம். கொடுக்கப்பட்ட நிதி உதவிக்கேற்ப இந் நிறுவனம் இயங்கவில்லை. இதற்கென பெற்ற வங்கிக் கடன் திருப்பிக் கொடுபடவில்லை. எனவே சீ-நோர் நிறுவனத்தை யாரிடமும் கையளிக்க நாம் தயாரில்லை.

### பொய்ப்பிரசாரம்

காரைநகர் சீ-நோர் நிறுவனம் மூடப்படும் என்பது பொய்ப்பிரசாரம். இதை மேலும் அபிவிருத்திசெய்ய நாம் முயற்சிக்கின்றோம்.

இந்நிறுவனத்தினுல் அரசாங்கத்துக்கு பிரச்சினைகள் அதிகம். இறக்குமதிக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டதால் இந்நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு சந்தையில் கிராக்கி இல்லை.

மேலும் தேவைக்கு அதிகமான தொழிலாளர்கள் இங்கு கடமைக்கு அமர்த்தப்பட்டதால் அவர்களைவேலையிலிருந்து நீக்கவேண்டியேற்பட்டது.

திரு- நடராசா திரு- வீரரத்தினுவின் பேச்சை ஆட்சேபித்து காரசாரமாகப்பேசினுர்.

''இந்நிறுவனம் நஷ்டம் என்கிறீர்கள், யாழ் மாவட்ட சபையிடம் இதை ஒப்படைத்தால் நாம் பெரும்லாபத்தைக் காட்டுவோம்'' என்ருர்.

### நவ. 3ல் கொழும்பில் மகாநாடு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் சீ-நோர் நிறுவனத்தின் நிலைகுறித்து ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்காக நவம்பர் மாதம் 3ம் திகதி உயர் மட்ட மகாநாடு ஒன்று கொழும்பில் நடைபெறும் என்று கடற்றொழில் மந்திரி திரு. பெஸ்டஸ் பெரேரா, யாழ். செயலகத்தில் நடைபெற்ற மகாநாட்டில் தெரிவித்தார்.

இம்மாநாட்டில் யாழ் மாவட்டசபைத் தலைவர் யாழ். மாவட்ட எம். பி.க்கள், சீ-நோர் உயரதிகாரிகள், யாழ்-அரசாங்க அதிபர் மற்றும் அதிகாரிகளும் கலந்துகொள்ள வேண்டும் என்றும் கடற்றொழில் மந்திரி கேட்டுக்கொண்டார்.

(மா-இ)

## காரை-சீ-நோர் நிறுவனம் மூடப்படமாட்டாது

### அமைச்சர் பெஸ்டஸ் உறுதி

(யாழ்ப்பாணம்)

"காரைநகர் சீ-நோர் நிறுவனத்தை எக்காரணம் கொண்டும் மூடமாட்டோம்'' என்று கடற்றொழில் மீன்பிடி அமைச்சர் திரு, பெஸ்டஸ் பெரேரா உறுதியளித்துள்ளார்.

யாழ் செயலகத்தில் யாழ் அரசாங்க அதிபரின் பணிமனையில் நடைபெற்ற உயரதிகாரிகளின் மகாநாட்டிற்கு தலைமை வகித்து திரு. பெஸ்டஸ் பெரேரா உரையாற்றினுர்

காரைநகர் சீ-நோர் நிறுவனம் சம்பந்தமாக இவ் உயர் மட்ட மகாநாடு நடைபெற்றது.

திரு பெஸ்டஸ் பெரேரா மேலும் பேசுகையில், இலங்கையில் பிடிக்கப்படும் மீன் வகைகளில் யாழ். மாவட்டத்தில் ஆறிலொருபங்கு பிடிக்கப்படுகிறது. ஆதலால் யாழ்,மாவட்டத்துக்கு அதிக உதவிசெய்ய முன்னிற்கின்ருேம். ஆனுல் நிதி உதவிசெய்ய திறைசேரியில் போதிய பணமில்லை என்ருர்.

## சதாத்தின் ஜனஸா இன்று நல்லடக்கம்

### வெளிநாட்டு தலைவர்களுக்கு பலத்த பாதுகாப்பு

கெய்ரோ, அக். 9

படுகொலை செய்யப்பட்ட எகிப்திய அதிபர் ஜனுப் அன்வர் சதாத்தின் ஜனஸா நாளை சனிக்கிழமை அரசு மரியாதைகளுடன் நல்லடக்கம் செய்யப்படும்.

இராணுவ அணிவகுப்பின் போது ஜனுப் சதாத் சுடப்பட்ட அதே இடத்திலேயே அவரின் ஜனஸா அடக்கம் செய்யப்படும் என்றும் அங்கு நினைவு மண்டபம் கட்டப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் ஜனுப் சதாத்தின் இறுதிச்சடங்குகளில் கலந்து கொள்வதற்காக கெய்ரோவரும் உலகத் தலைவர்களுக்கு தீவிரபாதுகாப்பு வழங்கப்படும் என கெய்ரோ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

இஸ்ரேலிய பிரதமமந்திரி திரு மெனுச்சம் பெகின் எகிப்திய அதிபரின் இறுதிச்சடங்கில் கலந்து கொள்ளும் பொருட்டு நாளை கெய்ரோவிற்கு விஜயம் செய்யவுள்ளார். இவருடைய பாதுகாப்புக்கருதி பலமெய்ப்பாதுகாவலர்களும் இவருடன் கெய்ரோவிற்கு வருகின்றனர். ஓய்வு நாளான சனிக்கிழமையில் யூதர்கள் வாகனங்களில் செல்லக்கூடாதென்ற விதிப்படியால் சதாத்தின் ஈரணை ஊர்வலத்தில் இஸ்ரேலிய பிரதமர் திரு. பெகின் நடந்தே செல்வார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### யு. எஸ். ஜனுதிபதி கலந்து கொள்ளார்

பாதுகாப்புக்கருதி அமெரிக்கஜனுதிபதி திரு. ரொனுல்ட் றீகனும், உபஜனுதிபதி திரு. ஜோர்ஜ் புஷ்ஷும் சதாத்

6-ம் பக்கம் பார்க்க

**அரிய சந்தர்ப்பம்**

றேடியோ - டெலிவிஷன், ஏயர்கொண்டிசனிங், வெல்டிங் மூன்று மாத டிப்பிளோமா பயிற்சிகள் ஆரம்பம் 12-10-81. அனைவரும் சேரலாம். நேரில் வரவும்.

**நாஷனல் அக்கடமி**

மொம்சார் கட்டிடம், 11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1191

விரையுங்கள்!

**தீபாவளி மலிவு விற்பனை**

கௌரிகரமாகத் திகழ்ந்திட கௌரி ரெக்ஸ்ரைல்ஸ் பிடவைகளை நாடுங்கள்!

**கௌரி ரெக்ஸ்ரைல்ஸ்**

155,-156, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7457. [1189]

### மணிவாக்கு

முன்னேற முயலும் மனிதனின் ஆற்றலுக்கு எல்லை உண்டு. ஆனால் இன்பம் முயற்சியிலொழிய வெற்றியில் அல்ல.

— மகாத்மாகாந்தி

# நமது நோக்கு

## சட்டத்தின் சீர்குலைவு

நாட்டில் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்திருக்கும் நிலையை நீதி அமைச்சர் கலாநிதி நிஸங்க விஜேரத்தின பாராளுமன்றத்தில் பிரஸ்தாபித்திருக்கிறார்.

நீதித்துறை (திருத்த) சட்டமூல விவாதத்துக்கு பதிலளித்துப் பேசியபோது இந்த நிலையைக் கண்டித்துப் பேச உடனடி சம்பவம் ஒன்றைக் குறிப்பிட்டிருந்தார்.

கல்கிசை நீதிமன்றவளவிலேயே அத்தினத்தில் ஒரு காணிவழக்கு சம்பந்தமாக வந்த இருவர் சுட்டுக்கொல்லப்பட்டதை உதாரணமாகக்காட்டி அதுபோன்ற சம்பவங்கள் நாட்டில் நீதிபரிபாலன சுதந்திரத்தை பயமுறுத்துகின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இவ்வாறு சட்டம் மீறப்படுவதுமன்றி பயங்கரவாதம் நாளுக்குநாள் அதிகரித்து வருவதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும்.

இந்தப்பயங்கர நிலை எமது நாட்டுக்கு இந்தக் காலத்துக்கு சிறப்பாக உரியதா என்றும் நாம் சிந்திக்க வேண்டும்.

இங்கும் அங்கும் தனிப்பட்ட வன்செயல்கள் நடப்பதானால் அதுபாரதூரமான விளைவை ஏற்படுத்த மாட்டாது ஆட்சியை அந்தரிக்க வைக்கும் நிலையில் வன்முறை ஒருவாழ்க்கை வழியாக தலையெடுப்பதானால் அதனை அரசுமட்டுமல்ல, மக்களும் கூர்ந்து சிந்திக்கவேண்டிய பெரும் பொறுப்பு உண்டு.

மக்கள் என்று நாம் குறிப்பிடும்போது மேலே குறிப்பிட்ட கல்கிசைக் கொலையையே கவனத்துக்கெடுக்கின்றோம்.

கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவரை கோட்கடமை புரிந்த பொலிஸார் கைது செய்து, நீதவான் விசாரணை நடந்த போது, சம்பவம் நடந்த நேரத்தில் கூடியிருந்த மக்கள் கூட்டத்தில் எவராவது சாட்சியம் அளிக்க முன்வரவில்லை. இதனை நீதவான் கண்டித்து, கொலையென்ற தீர்ப்பை வழங்கியிருந்தார்.

சட்டம், ஒழுங்கு நாளடைவிலே உதாசீனப்பட்டு வருவதால் சட்டத்தின் பாதுகாப்பில் மக்கள் நம்பிக்கை இழக்கும்நிலை முன்னேறிவருகின்றது. சட்டத்தை மீறுபவர்களுக்கே வெற்றியென்ற அளவிற்கு அக்கிரமம் அதிகரிக்க

தனிமனிதன் வாழ்வில் மட்டுமல்ல, சமூக வாழ்வில் அரசியல் அடிப்படையில் நிகழும் வன்செயல்கள் எல்லாம் அடி அத்திவாரத்தில் வேறுபட்டவை அல்ல.

துப்பாக்கிப் பலமுள்ளவன் வீரவான் என்று எண்ணும்அளவிற்கு அரசாங்கத்துக்கு சவால் ஏற்படுகின்றது. தனி அரசுமட்டுமல்ல, சர்வதேச ரீதியிலும் இந்த நிலைமை வலிமை பெறுகின்றது.

நவீனமுறைகளைக் கையாளும் கொலைகாரர், அரசின் ஆற்றலைமட்டுமல்ல, அரசியல் போக்குகளை மாற்றியமைக்க முயல்கின்றனர். இந்த மனப்போக்கு இன்றைய உலகின் முதன்மை பெற்ற அம்சமாகக் கருத அண்மையில் நடைபெற்ற அரசியல் கொலைகள் ஆதாரமளிக்கின்றன.

எங்கு பார்த்தாலும் போர்க்கோலம்; உலகம் இரண்டுபடுவது; நாடு இரண்டுபடுவது, சமூகம் இரண்டுபடுவது, கிராமம், குடும்பங்கள் கூட பிணக்கால் பிரிவினைப்படுவது, பகைமையை வளர்க்கும் செயல்களாம்.

பகைமை உள்ளத்தில் நஞ்சை ஊட்டும் பண்பு; அது பெருக்கெடுத்தால் அதன் முடிவு அழிவு.

இந்த உண்மையை நிலைநாட்டவே நீதியமைச்சர் எல்லோரின் ஒத்துழைப்பையும் கோரியிருக்கிறார். பகைமையை ஒழிக்க படைப்பலம் போதுமானதா?

படைப்பலத்தின் ஆதரவில் ஆட்சியின் அதிகாரம் தங்கியிருப்பதை நாம் மறந்துவிடவில்லை; அதே பலம் ஆட்சியை கவிழ்த்துவிடுவதையும் காண்கிறோம் அல்லவா?

ஜனநாயக ஆட்சியிலோ, அல்லது சர்வாதிகார அமைப்பிலோ வன்முறைக்கு இடமிருப்பது இன்றைய அரசியல் அனுபவம்; ஒரே ஒரு வேறுபாடு. சர்வாதிகாரி தன்னுடைய சொந்த அதிகாரத்தில் உறுதிகொள்கின்றான். அது பொய்த்தால் எல்லாம் போகும். ஆனால் ஜனநாயக ஆட்சியில், எதிர்க்கட்சி என்றொரு தனித்துவமான அரசியல் அம்சம் உண்டு. அது நாட்டின் அரசியல் உறுதிக்குப் பக்கபலமாக உள்ளது.

அதன் அவசியத்தை உணர்ந்த நீதியமைச்சர் கலாநிதி நிஸங்கவிஜயரத்ன எதிர்க்கட்சியினருக்கு விசேஷ அழைப்பை விடுத்திருக்கிறார்.

எதிர்க்கட்சி என்ன நிலையில் இருக்கின்றது? ஆட்சியின் முக்கிய அம்சமாக தொழிற்படுகின்றதா?

ஜனநாயக கோட்பாட்டின் பெருமையை நாம் உணர்ந்தோமானால், உலகநிலைஎவ்வாறானாலும், இந்தச் சின்ன அழகியநாட்டில், அமைதியை நிலைநாட்ட முடியும்.

வன்முறைக்கெதிராகப் போர் தொடுப்பது அரசாங்கத்தின் முக்கிய கடமை; அது செவ்வனே நிறைவேறுமானால் எதிர்க்கட்சி அதன் முன்மாதிரியைப் பின்பற்ற கடமைப்பட்டுள்ளது.

நிலைமைமோசமடையாது கட்டுப்படுத்த அனைவரும் திரளவேண்டும்.

### பாவனையாளர் சங்கங்கள் புனரமைப்பு

(புலோலி)

யாழ். உள்நாட்டு வர்த்தக உதவி ஆணையாளர் திரு. த. மார்க்கண்டுவின் பணிப்பைத் தொடர்ந்து வடமராட்சி வடக்கு கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயக்கமின்றியிருந்துவந்த பாவனையாளர் சங்கங்களை யாழ். விலைக்கட்டுப்பாட்டுப் பரிசோதகர் திரு. சிவபாத சுந்தரம் அவ்வப்பகுதி கிராமசேவை அலுவர்களின் உதவிகளுடன் புதுப்பிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். (ஸ)

# மகாகவி பாரதியின் சில சிதறிய சிந்தனைகள்

(காலத்தால் அழியாத கவிதைகள் புனைந்தார் பாரதியார். எக்காலத்துக்கும் ஏற்பக் கட்டுரைகளும் கவிதைகளும் எழுதினர். அவரின் சிந்தனைப்பொறிகள் இன்றுங்கூட பலலரவூக்குவித்து வருகின்றன. பாரதியாருக்குத் தமிழில் மட்டுமின்றி ஆங்கிலத்திலும்சிறந்த புலமையுண்டு. அவர் கவிதைகள், கட்டுரைகள் எழுதியுள்ளார். அவரது 'சிறிய சிந்தனைகள்' சிலவற்றை பாரதி நூற்றாண்டையொட்டி முன்னைநாள் அமெரிக்க தூதராலய பத்திரிகை பகுதித் தலைவர் பி. எஸ். செட்டியார் இங்கு தொகுத்தும் மொழி பெயர்த்தும் வழங்குகின்றார்.)

இயன்றவரை தமிழே பேசுவேன், தமிழே எழுதுவேன். சிந்தனை செய்வது தமிழிலே செய்வேன். எப்பொழுதும் பராசக்தி முழு உலகின் முதற்பொருள் அதனையே தியானஞ்செய்து கொண்டிருக்க முயல்வேன். அதனைக் குறித்தே ஓயாமல் எழுதிக்கொண்டிருக்க முயல்வேன்.

### பொழுதுவீணே கழியாமல்

- பொழுது வீணே கழிய இடங்கொடேன், லௌகிய காரியங்களை ஊக்கத்துடனும் மகிழ்ச்சியுடனும், அவை தோன்றும் பொழுதே பிழையறச் செய்து முடிக்கப் பழகுவேன்.
- உடலை நல்ல காற்றாலும் இயன்றவரை சலிப்பதாலும் தூய்மையுறச் செய்வேன்.
- மறைத்தும் தற்புகழ்ச்சி பாராட்டுதல் விரும்பேன்.
- மூடரின் உள்ளத்தில் என்னைப்பற்றிய பொய்மதிப்புண்டாக இடங்கொடேன்.
- ஸர்வ சக்தியுடைய பரம்பொருளைத் தியானத்தால் எனனுள்ளே புகச்செய்து எனது தொழில்களெல்லாம் தேவர்களின் தொழில்போல் இயலுமாறு சூழ்வேன்.

தொகுத்தவர்;

பி.என். செட்டியார்.

- பொய்மை, இரட்டுற மொழிதல், நயவஞ்சனை, நடிப்பு, இவற்றால் பொருளீட்டிப் பிழைத்தல் நாய்ப்பிழைப்பென்று கொள்வேன்
- இடையறாத தொழில் புரிந்து இவ்வுலகப் பெருமைகள் பெறமுயல்வேன். இயலாவிடின் விதிவசமென்று மகிழ்ச்சியோடிருப்பேன்.
- எப்போதும் மலர்ந்த முகம் இனியசொல், தெஜந்த சித்தம் இவற்றோடிருப்பேன். ஓம்.

### சீர்கேட்டின் காரணம்

- பழைய கற்பனைகளைத் திரும்பிச்சொல்லுதல், தமிழ்நாடு சீர்கெட்டதின் காரணம் - உவமைகள்
- தீய கர்மங்களின் பயன் விடாது. இப்பிறப்பிலே பலிபோலத் தொடரும். ஆதலால் இன்பத்தை விரும்புவோன் தீச்செயல்கள் செய்யாதொழிக. தீய சிந்தனைகளும் தீச்செயல்களே யாம்.
- கடவுளைப்போன்று நான் சிந்திக்க முடியும், கடவுளைப்போன்று செயலாற்றவும்வேண்டும்.
- உலகப் பொருட்களுக்காக நான் அவாவுறுவதில்லை உலகின் எசமான் நான், அது என் எசமான் அல்ல. இயற்கையாகவே என்னை வந்தடையும் பொருட்களை ஏற்று அத்துடன் திருப்தியடைகிறேன், பரந்த இப்பூவுலகு எனக்கு எம்மாத்திரம்; ஆனதினால் பற்றின்றி வாழ்கிறேன்.

—மொழிபெயர்ப்பு

### அடிமை

- பிறர் சகாயத்தை நாடுபவன் அடிமை; கையேந்தி கேட்பவன் தன்னையே விற்கிறான்
- "நீ சீக்கிரம் சாக விரும்பினால் நின் புகழ்பாடு; மகோன்னதமாக நீ வாழ விரும்பினால் பிறர் நலம் கருதி தொண்டு செய்."
- பாதாள பள்ளத்தாக்கின் அண்மையில்தான் வானோங்கிய சிகரங்கள் எழுகின்றன.
- "நீ குதூகலிக்கும்பொழுது பட்ட துன்பங்களை நினைவு கூர்ந்து அடக்கமாக நட. சதா தொழில் செய் - சாந்தமாகவும் சந்தோசமாகவும்; தலைக்கனம் அடையாதே!"
- "அறிவால் அறிவதற்கும் சுய அனுபூதியால் தெளிந்து உணர்வதற்கும் பேதமுண்டு. அறிவால் அறிவது ஏட்டுச் சுரைக்காய், தற்பெருமையை வளர்க்குமே யொழிய சக்தியற்றது. சுவாநுபூதி மகாசக்திவாய்ந்தது.

—மொழிபெயர்ப்பு

- 'உள்ளது ஒன்று (கடவுள்); அது ஒன்றே உள்ளது' என்பதை பரிபூரணமாக உணர்கிறேன்
- இச்சைகளை அடக்கினால் இந்திரிய ஜயம் பெறலாம்; அது அமைதிக்கு வழிகோலும். வாழ். வாழவிடு
- வாழ்க்கையின் இன்பங்களை நுகர்வதில் எவ்விதபிழையுமில்லை, ஆனால் அவைற்றிற்கு அடிமையாவதே பிழை அடிமைத்தனம் அறிவைமயக்கும், அறிவே மனிதனின் மகோன்னத தத்துவம்.
- பகுத்தறிவுடன் கூடிய வாழ்க்கை சாந்த வாழ்விற்கு முரணாகஇருக்கவேண்டிய அவசியமில்லை. தர்க்க சாஸ்திர நிபுணர்களும் விமர்சகர்களும் ஈடுபடும் விதண்டா வாதங்களும் முட்டையில் மயிர்பிடுங்கும் தன்மையும் பகுத்தறிவாகாது. இவர்கள் பகுத்தறிவை துஷ்பிரயோகம் செய்பவர்கள்.

(6ம் பக்கம் பார்க்க)

# மக்கள் கருத்து

### தமிழ்ப்பணி மன்றம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் வெரித்தாஸ் வானொலியின் "தமிழ்ப்பணி" ஒலிபரப்பைப் கேட்போர் தொகை நாளும் பெருகிவருவது மகிழ்ச்சிக்குரியது. இந்த ஒலிபரப்பில் இடம்பெறும் உலகச் செய்திகள் பலரது பாராட்டுக்களையும் பெற்று வருகின்றன. உண்மைச் செய்திகளை உரைப்பதுடன் மனித நற்பண்புகளை வளர்க்கும் பல நிகழ்ச்சிகளையும் சுவைபடத் தொகுத்தளிப்பதிலும் 'தமிழ்ப்பணி' ஒலிபரப்பு முன்னணி இடம் வகிக்கிறது.

இவ்வாறான, முழுமனித வளர்ச்சிக்குத் துணை செய்யும் ஒலிபரப்பைக் கேட்பவர்கள் தமது பகுதிகளில் "தமிழ்ப் பணி" மன்றங்களை அமைத்துச் செயல்படுவது சாலச்சிறந்தது. அதன்மூலம் ஒலிபரப்பை ஒழுங்கான முறையில் கேட்டுப் பயன்பெறவும் நிகழ்ச்சிகள் பற்றிய அபிப்பிராயங்களைத் திரட்டி, ஒலிபரப்பாளர்களுக்கு அறிவிப்பதன்மூலம் நிகழ்ச்சிகளின் தரத்தை உயர்த்துவதற்கும் உதவமுடியும். அத்துடன், குழுவாக இயங்கும் வாய்ப்பினைப் பயன்படுத்தி, தமது பகுதிகளின் பொதுவான முன்னேற்றத்திற்குப் பாடுபடவும், சமூக நலப் பணிகளில் ஈடுபடவும் இம் மன்றங்கள் பயன்படும்

தமது பகுதிகளில் தமிழ்ப் பணி மன்றங்களை ஏற்படுத்துவோர் அங்கத்தவர் பற்றிய விபரங்களை மாவட்ட அமைப்பாளருக்கு அறிவித்தால் பயனுயிருக்கும். "தமிழ்ப்பணி" மன்ற அங்கத்தவர்களுக்காக மாதவெளியீடு ஒன்று வெளியிட ஆலோசிக்கப்படுவதால், விபரங்களை அனுப்புதல் பயனுள்ளது.

"தமிழ்ப்பணி" ஒலிபரப்பை ஒவ்வொரு நாளும் காலை 7-00 முதல் 7-30 மணிவரை சிற்றலை 16, 19 மீட்டரிலும் இரவு 7-30 முதல் 8-00 மணிவரை சிற்றலை 31, 25 ஆகிய மீட்டர்களிலும் கேட்கலாம்.

எஸ். உமாகாந்தன்

யாழ். மாவட்ட "தமிழ்ப்பணி" மன்ற அமைப்பாளர்

அஞ்சலகம், யாழ்ப்பாணம்.

## 33 வருட கல்விச் சேவையின் பின்பு ஓய்வு

வேலணை சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மகாவித்தியாலயத்தில் 18 ஆண்டுகள் ஆசிரியப்பணிபுரிந்த சரவணையூர் திரு கா. இ ஜெகஜோதி தமது 33வருட கல்விச் சேவையினினும் 60 வயதில் இளைப்பாறுகிறார் மாவிட்டபுரம் பேராசிரியர் கா. இளையதம்பியின் இரண்டாவது புதல்வரான இவர் சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியைப் பெற்றார். தந்தையாருடைய நாட்டிலே கொல்லங்கலட்டி சைவவித்தியாசாலையிலும், தெல்லிப்பளை இருபாஷா பாடசாலையிலும், வீமன்காமம் துவிபாஷா பாடசாலையிலும் உயர்வகுப்புவரை பயின்று, திருநெல்வேலி சைவாசிரியர் கலாசாலையில் திரு. சி. சுவாமிநாதன், திரு. பொ. கைலாசபதி, இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, ந. கந்தசாமி ஐயர் ஆகியோரிடம் ஆசிரியப் பயிற்சி பெற்று முதன்முறையிலேயே சித்தியுமடைந்தார். இந்துக் கல்லூரி அதிகார சபையின்கீழ் உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையை ஏற்றுக் கொண்ட இவர் பின்னர் உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலைக்கு மாற்றப்பட்டு அக்கிராமத்தில் 15 ஆண்டுகளின்மேல் சேவைபுரிந்து பெற்றோரிடத்திலும் சக ஆசிரியர்கள் மாணவரிடத்திலும் அழியா இடத்தையும் பெற்றார்.

இக்காலத்தில் மாவிட்டபுரம் கிராம. மு. சங்கத்தின் உபதலைவராகவும் ஐ நா. சங்கத்தின்

(6ம் பக்கம் பார்க்க)

துன்னாலை இராசகோபால் கொலை

# யாழ். மேல்நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தப்பட்டது

(புலோலி)

துன்னாலை வாலிபர் இராசகோபால் கொலை வழக்கை யாழ் மேல் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்திய பருத்தித்துறை நீதவான் 2ம், 3ம் எதிரிகளைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கடந்த வைகாசி மாதம் 19ம் திகதி காலை துன்னாலையைச் சேர்ந்த இராசா இராசகோபால் (வயது 26) துன்னாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் கொலைசெய்யப்பட்டு இளைக் கயிற்றில் தொங்கக் கண்டுபிடிக்கப்பட்டார்.

இவ்வாலிபரைக் கொலை செய்ததாக சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம் மாணிக்கம் சின்னத்தம்பி, வடிவெலு சரவணசிவா ஆகியோர்மீது குற்றஞ்சாட்டிப் பருத்தித்துறைப் பொலிசார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வழக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. எஸ். மகேசன் முன்னிலையில் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டு வந்தது.

பொலிசாருக்கு உதவியாகச் சட்டத்தரணிகளான எம். சோமசுந்தரம், எஸ். சிவனருள் சுந்தரம் (காண்டீபன்) செல்விகளான விசயராணி மகாதேவா பவானி காசிநாதர் ஆகி 1ம், 3ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகளான ஆர். தம்பிரத்தினம், கே. முத்துக்குமரு, எஸ் ராஜகாரியா வி. செல்லத்தம்பி, செல்விகளான உமா. துரைசிங்கம், எச். சி பிலிப் ஆகியோரும் 2ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகளான ஆர். ஸ்ரீசிவாயா என். கிருஷ்ணராசா ஆகியோரும் ஆஜராகியிருந்தனர்.

நீதவான் வழக்கை யாழ். மேல் நீதிமன்றத்திற்குப்பாரப்படுத்தியதுடன் 2ம், 3ம் எதிரிகளைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். இக்கொலை வழக்கின் 1ம் எதிரியான சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம் யாழ். மேல் நீதிமன்றத்தினால் அனுமதிக்கப்பட்டபிணையில் இருக்கிறார். (இ)

### சாதாத்தின்—

(1-ம் பக்கத் தொடர்ச்)

தின் இறுதிச்சடங்குகளில் கலந்து கொள்ள மாட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

### சார்ள்ஸ்பங்குபற்றுவார்

பிரிட்டிஷ் இளவரசர் சார்ள்ஸ் எகிப்திய ஜனாதிபதியின் இறுதிச்சடங்கில் கலந்து கொள்வார் (வெ-இ)

### 33 வருட...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

உப தலைவராகவும் கொல்லங்கலட்டி வீரகத்திப் பிள்ளையார் கோயிலில் புராணம் படிப்பவராகவும் பணிபுரிந்தார். பின்னர் தமது விருப்பப்படி வேலணை சேர். வை. து. ம. மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றார்.

அதிபர்களோடும், சக ஆசிரியர்களோடும் தோழமைபூண்டு கல்லூரியின் எல்லாத்துறைகளிலும் முன்னின்று இவர் உழைத்தமையை அதிபரே அறிக்கையில் பாராட்டியுள்ளார்.

இக்காலத்தில் சரவணைக்கிராமத்தில் கி.மு.சங்கத்தின் உயர் தலைவராயிருந்து 2 ஆண்டிற்கு மேலே தன்னலமற்ற சேவை புரிந்தமைக்கு ஊரவர்களே சாட்சிபகர்வர்.

சைவாலயங்களிலே புராண படனம் நிகழும்போதெல்லாம் ஆங்காங்கு தானுகச் சென்று இவர் பயன்சொல்லிவருகிறார்.

—க. இராசலிங்கம்

ஹோம் பிஞன்ஸ் லிமிட்டெட்
ஆரம்பித்திருக்கும்
உல்லாச பஸ் சேவை
யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம்
கண்ணியமான, பாதுகாப்பான பஸ்சேவை
யாழ்ப்பாணத்திலிருந்து
புறப்படுதல்:
செவ்வாய், வியாழன்,
ஞாயிற்றுக்கிழமைகளில்
கொழும்பிலிருந்து புறப்படுதல்:
திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில்
யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:
(1) ஹோம் பிஞன்ஸ் லிமிட்.
இல: 82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: இல: 8310
(2) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: இல: 7596.
கொழும்பில் டிக்கட் பெறும் இடங்கள்
ஹோம் பிஞன்ஸ் லிமிட்டெட்
463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190.
ரவிந்திரா ஸ்டோர்ஸ்
285, காலி வீதி, வெள்ளவத்தை.
J. M. S. மிராண்டாஸ்
109, ஓல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
127, காலி வீதி, பம்பலப்பிட்டி
தொலைபேசி இல: 88866
டிக்கட் விலை: ரூபா 65-00

இன்று ஆரம்பம்

# ஆனைப்பந்தியில் 10 நாள் இசை விழா

(அரியாலை)

ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரி இசைப்பகுதியினரின் இரண்டாவது இசைவிழா நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்றுமுதல் அடுத்த மாதம் 19ந் திகதி வரை நடைபெறவிருக்கிறது விழா 10 தினங்களிலும் நிகழ்ச்சிகள் மாலையில் ஆரம்பமாகும்

இன்றைய நிகழ்ச்சி பிற்பகல் 5-30 மணிக்கு ஈழ நல்லூர் பி. எஸ் பிச்சையப்பா குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமாகும்.

யாழ். முதல்வர் திரு. இராஜா விசுவநாதன் தலைமை வகிப்பார். அதனைத் தொடர்ந்து செல்விகள் எஸ். வினோதினி, ரி. ஜெயந்தி, கே. ராதிகா, கே. சிவாகினி, எஸ். பி யசோதரா பாரதி, ஆர். யசோதரா, என். ஜெயா யூலிற் ரி கபோதினி, ரி. துஷ்யந்தி ஆகியோரின் வீணை இசை நடைபெறும்,

செல்வி எஸ். தேவவதனியின் பாட்டுக்கச்சேரி செல்வன் பி. கண்ணன் வயலின் வாசிக்க செல்வன் எஸ் கே கணேசலிங்கம் மிருதங்கம் வாசிப்பார் இதனைத்தொடர்ந்து திரு. வி. பரமசாமியின் பாட்டுக்கச்சேரி நடைபெறும். திரு. கே. சித்தி விநாயகம் வயலினும் திரு. எஸ் வரதராஜசர்மா மிருதங்கமும் வாசிப்பார் அடுத்த நிகழ்ச்சி திருமதி கலாநாயகி சூரியகுமார் பாட்டு திரு. எஸ். வெங்கடேசசர்மா வயலினும் திரு. எஸ். கே. கணேசலிங்கம் மிருதங்கமும் வாசிப்பர். (அ)

### சி-நேசரின்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்று குறிப்பிட்ட யாழ் எம் பி திரு. வெ யோகேஸ்வரன் ''யாழ் அபிவிருத்தி சபைத்தலைவர் கேட்டுக்கொண்டபடி, இந்நிறுவனத்தை மாவட்ட அபிவிருத்தி சபையிடம் ஒப்படைத்துப்பாருங்கள் சாபத்தில் இயக்கிக்காட்டுகின்றோம்'' என்று சொன்னார்.

அவர் மேலும் பேசுகையில், ''மாவட்ட சபைத் தலைவரின் ஆலோசனையை முற்றுமுழுதாக நான் ஏற்றுக்கொள்கிறேன் யாழ்மாவட்டத்திலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த எம். பிக்களில் ஒருவரையாவது இந்த ஸ்தாபனத்தின் இயக்குநர் சபையில் உறுப்பினராக நியமிக்கவேண்டும் அப்படி நியமிக்கப்படும் பட்சத்தில் ஊதியம் பெறுமலேயே நாங்கள் சிறந்த முறையில் கடமையாற்றுவோம். கடந்த காலங்களில் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய அரசாங்க அதிபர்களே இயக்குனர் சபைக்கு நியமிக்கப்பட்டார்கள். இவர்களுக்கு இந்நிறுவனம் சரிவர இயங்க வேண்டுமென்பதில் அக்கறையில்லை என்பதற்கு இயக்குநர் சபைக்கூட்டம் நடைபெறுவது சான்றுபகர்கிறது. குப்பையைக்கூட்டிக் கம்பளத்துக்குக் கீழ் தள்ளிப் போட்டுவிட்டு குப்பை இல்லை என்பது தவறு: நாங்கள் கம்பளத்தை வெளியில் தூக்கிவிட்டு, குப்பையை தள்ளிவிடுவதுதான் சரி'' என்றார்.

### மகாகவி...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

- மக்களிடையே இன்று பரவிவரும் ஆன்மீக ஸ்தாபனங்களில் முக்காலே மூணுவீசமும் ஆஷாடபூபதிகள், உருத்திராக்க பூனைகள் கபடசந்நியாசிகள் ஆகியோரால் இலகுவாகப் பணம் சம்பாதிப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட மார்க்கங்களேயாம்.
- ஏகாக்கிர சித்தனையின் பெறுபேறே காரியசித்தி பசிர்முகசிந்தனை ஓட்டத்தை ஒருமுகப்படுத்தி தைலதாரை போன்று ஒன்றில் ஊன்றி நிலைக்கச் செய்வதே ஏகாக்கிர சித்தனை''

## சபாநாயகர் கலந்துகொள்வார்

(கொழும்பு)

எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத்தின் இறுதிச்சடங்குகளில், இலங்கை ஜனாதிபதி சார்பில் சபாநாயகர் ஜனாப் பாக்கிர் மாக்கார் கலந்து கொள்வார்.

## பத்திரிகையாளர் காலமானார்

(கொழும்பு)

பிரபல பத்திரிகையாளர் திரு. யூஸ்ரஸ் விஜயதுங்கா (57 வயது) நேற்றுகாலமானார்.

சுஸுக்கி SUZUKI K 125
உங்கள் சொகுசான பயணத்தின் நாகரீகமான துணைவன்......
— தானியங்கும் தன்மையில்......
— கவர்ச்சிகரமான தோற்றத்தில்......
— மனங்கவர் வண்ணங்களில்......
— நிதான விலையில்......
இன்றைய உலகின் நவீன நாகரீகத்துணைவன்
சுஸுக்கி K 125 14950/-மட்டுமே
நாடுங்கள்———————————
சி. சின்னத்துரை
அன் கொம்பனி
25, ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்

உ
அம்பாள் துணை

## தசாக கிருகயக்ஞ அழைப்பிதழ்



அன்புடையீர்!

துர்மதி ஹூ புரட்டாதி மீ 16 உ (2-10-81) வெள்ளிக்கிழமை அம்பாள் திருவடி எய்திய கொக்குவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் தேவஸ்தான பிரதம குருக்கள் பிரம்ம ஸ்ரீ நா. முத்துக்குமாரசாமி குருக்கள் அவர்களின் அன்பு மனைவி

ஜெகதீஸ்வரி அம்மாள்

அவர்களின் தசாகம் (11-10-81) புரட்டாதி 25-ம் திகதியும் (ஞாயிறு) சபிண்டீகரணம் (13-10-81) புரட்டாதி 27-ம் திகதியும் (செவ்வாய்) இருகயக்ஞம் (14-10-81) புரட்டாதி 28-ம் திகதியும் (புதன்) நடைபெறும். அத்தருணம் தாங்கள் அனைவரும் வந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம். தனிப்பட்ட முறையில் நடக்கும் கிரியைகளுக்கு அறிவித்தல் தரமுடியாமைக்கு வருந்துகிறோம். அனைவரும் சமூகந்தந்து சிறப்பிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

இங்ஙனம்
நா. முத்துக்குமாரசாமிக் குருக்கள்
பிள்ளைகளும், மருமக்களும்.

நந்தாவில்,
கொக்குவில். 1193

## மரண அறிவித்தல்

### திருமதி. க. நாகரட்ணம்

திருமதி, க நாகரட்ணம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற எம். சி. இரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், சிறிபத்மநாதன் (சீமெந்து கூட்டுத்தாபனம், கொழும்பு,) காலஞ்சென்ற பத்மநாயகி, கனகாம்பிகை (பொன்னூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும். டாக்டர் ச. வேலும்மயிலும் (தனியார் வைத்தியசாலை கோண்டாவில்) லட்சுமி ஆகியோரின் மாமியாரும், கோபிகிருஷ்ணாவின் பேத்தியாருமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று (10 - 10 - 81) காலை 9 மணிக்கு 181, பருத்தித்துறை வீதி, நல்லூரிலிருந்து செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

1185

இப்பத்திரிகையாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிடெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி 808ம் இலக்கத்திலுள்ள கலாநிலை அச்சகத்தில் 1981 ஆம் ஆண் அக்டோபர் 10-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது. Registered as a News Paper. The General Post office: Sri Lanka. Regd. Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 889, 8196.